| நேஷன் கட்டிடம் வரி | 13,376,476.63 | 12,306,863.92 | 16,905,054.00 |
| கட்டிட வாடகை | - | 630,000.00 | 900,000.00 |
| பொருளாதார சேவை கட்டணம் | - | - | 313,858.00 |
| பெருநகர அலுவலகம் | - | - | 327,498.00 |
| தணிக்கை கட்டணம் | 70,000.00 | 2,880.00 | 60,000.00 |
| எரிபொருள் | 41,651.47 | 41,651.47 | 9,811.00 |
| பிற கடன் வழங்குபவர்கள் | 293,212.65 | 327,498.00 | - |
| சம்பளம் வழங்கப்படும் | 143,960.83 | - | - |
| செலுத்த வேண்டிய செலவுகள் | 21,867,195.68 | - | - |
| குத்தகை கடன் | 24,001.73 | - | - |
| | **164,775,546.82** | **240,606,949.21** | **371,925,615.00** |

## 28. தொடர்புபட்ட நபர்களை வெளிப்படுத்தல் (எஸ்.எல்.ஏ.எஸ்.30)

| பெயர் | பதவி | தொடர்புடைய நவர்களின் கொடுக்கல் வாங்கல் தன்மை | முகவரி |
|---|---|---|---|
| 01. துசித ஜெயவர்தன | தலைவர் | இல்லை | இல.181,<br>ஈஸ் நெஸ்ட்,<br>மண்டாவெல. |
| 02. உபுல் பல்லேகங்கொட | பொது முகாமையாளர் | இல்லை | இல.240,<br>குறுந்துவத்த மாவத்தை,<br>போகுந்தர,<br>பிலியந்தல. |

**2015 நிதியாண்டுக்காக செலசினே தொலைக்காட்சி நிறுவனம் மற்றும் மேற்குறிப்பிடப்படும் நபர்கள் மற்றும் நபர்களின் குடும்ப அங்கத்தவர்களுடன் தொடர்புடைய பிரிவினருடன் எவ்வித கொடுக்கல் வாங்கல்களும் மேற்கொள்ளப்படவில்லை.**

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. } சீஏஎஸ்/ஈ/எஸ்சீரீஜ்/06/15/05 | ඔබේ අංකය / உமது இல. / Your No. } | දිනය / திகதி / Date } 2017 ஏப்ரல் 29

தலைவர்,
செலசினே தொலைக்காட்சி நிறுவனம்,

**செலசினே தொலைக்காட்சி நிறுவனத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

செலசினே தொலைக்காட்சி நிறுவனத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. செலசினே தொலைக்காட்சி நிறுவனத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, .- இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.- No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்க ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளை நான் பெற்றுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 நிறுவனத்தை நிறுவுதல்**

இந்நிறுவனம் 2001 திசெம்பர் 20 திகதி வெகுசன தொடர்பு அமைச்சிற்கு உரித்தாக்கப்பட்டிருந்த போதிலும், அதன் குறிக்கோளும் கருமங்களும் உறுதிப்படுத்தி அதிகாரத்தினை செயற்படுத்துவதற்காக அதிகார சட்டத்தின் மூலம்

அல்லது வேறு ஏதும் சட்டத்தின் மூலம் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இந்த நிறுவனம் "செலசினே லிமிட்" என கம்பனிச் சட்டத்தின் கீழ் பொதுக் கம்பனி ஒன்றாக பதிவு செய்வதற்காக 2008 ஆண்டு முதல் செயற்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதி வரை அவ்வலுவல்கள் முடிவடைந்திருக்கவில்லை.

**1.5 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் நிதிக் கூற்றுக்களில் ஏற்படுத்தும் தாக்கங்களைத் தவிர, நிதிக் கூற்றுக்களானவை செலசினே தொலைக்காட்சி நிறுவனத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் (இ.பொ.து.க.நி)

பின்வரும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் பிரகாரம் நிதி நிலைமைக் கூற்றின் தேறிய பெறுமதி ரூபா 4,511,117 தொகையான கற்பனை சொத்துக்களைத் தனியாக பதிவு செய்வதற்கு பதிலாக ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் காட்டப்பட்டிருந்ததது.

**(ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 02**

(i) குத்தகை கொடுப்பனவுடன் தொடர்புடைய பிழையினை சரிசெய்வதற்காக பதிவுசெய்யப்பட்ட ரூபா 504,315 தொகைக்கான நாட்குறிப்பு பதிவுகளின் பெறுமதி காசுப்பாய்ச்சல் கூற்றில் காசு வெளிப்பாய்ச்சல் என பதியப்பட்டிருந்தது.

(ii) கட்டிட திருத்தச் செலவாகிய ரூபா 1,842,062 தொகை மீளாய்வாண்டிற்கான பணத்தில் இருந்து செலவிடப்பட்டிருக்காமையால் அதனை காசுப்பாய்ச்சல் கூற்றில் சீராக்கல்களின் கீழ் காட்டப்பட வேண்டும் எனினும், நிறுவனத்தினால் தொழிற்படு மூலதன மாற்றங்களின் கீழ் சீராக்கல் செய்யப்பட்டிருந்தது.

(iii) கிடைத்த முதலீட்டு வட்டி ரூபா 3,890,834 தொகை குறைவாக காசுப் பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டிருந்தது.

(இ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் நடைமுறை அல்லாச் சொத்துக்களின் பயன்தரு ஆயட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையால் ரூபா 7,782,363 கிரயத்தையுடைய ஆதனங்கள் பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் முற்றாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு காணப்பட்டது. அதன் பிரகாரம் மதிப்பீட்டு வழுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் திருத்தி அமைப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.2.3 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிலையான வைப்புக்கள், ஏழு நாட்கள் அழைப்பு வைப்புக்கள் மற்றும் சேமிப்பு கணக்குகளுக்காக மீளாய்வாண்டிற்கான முதலீட்டு வட்டி ரூபா 1,117,390 மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான பெறவேண்டிய வைப்பு வட்டி ரூபா 1,109,707 தொகையினைக் கடந்த வருடத்திற்கான இலாபத்துடன் சீராக்கல் செய்யப்பட்டிருந்தது.

(இ) (i) நடைமுறை சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்த நிறுத்தி வைத்தல் வரி மீதி ரூபா 770,137 தொகை அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ii) 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நடைமுறை சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்த நிறுத்தி வைத்தல் வரி ரூபா 5,917,583 தொகையினை குறிப்பிட்ட ஆண்டின் செலவு ஒன்றென இனங்கண்டிருக்காமையால் அப்பெறுமதியினால் நடைமுறைச் சொத்துக்கள் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) நிறுவனத்தின் கணக்கீட்டு கொள்கையின் பிரகாரம் ஒதுக்கவேண்டிய தொகையை விட ரூபா 4,448,643 தொகை ஐயக் கடன் ஒதுக்கப்பட்டிருந்தது.

(உ) செலசினே தொலைக்காட்சி நிறுவனத்தினால் 2014 ஜனவரி 15 ஆந் திகதி முதல் 5 வருட காலப் பகுதிக்காக வாடகைக்குப் பெற்றிருந்த திரைப்படக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான அலுவலகம் நடத்தப்படும் கட்டிடத்தை திருத்துவதற்காக 2014 ஆண்டில் ரூபா 9,210,310 தொகையான செலவொன்று கட்டிட உரிமையாளர் தரப்பினரிடம் எழுத்துமூல அங்கீகாரம் இன்றி மேற்கொள்ளப்பட்டிருந்தது. அச்செலவினை வருடத்திற்கான செலவு என இனங்காணப்படாமல் வாடகை காலப்பகுதியில் முறைப்படி பதிவழிப்பதற்காக நடைமுறை அல்லாச் சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 2.2.4 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்

கடன்பட்டோர் பட்டோலையின் படி 102 கடன்பட்டோர் மீதிகள் அவதானிக்கப்பட்டதுடன் அவற்றில் 92 கடன்பட்டோருக்கு உள்ளகக் கணக்காய்வுப் பகுதியினால் மீதியை உறுதிப்படுத்துவதற்கான வினவும் கடிதம் அனுப்பப்பட்டிருந்தன. இது தொடர்பாக மீதிகளை உறுதிப்படுத்தும் 15 கடிதங்கள் நிறுவனத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுக்கு கிடைத்திருந்ததுடன் அவற்றில் 12 நிறுவனங்களின் மீதிகள் செலசினே நிறுவனத்தின் மீதிகளுடன் இணங்காதிருந்ததுடன் அவ்வாறு இணங்காதிருந்த பெறுமதி ரூபா 5,156,363 ஆகும்.

### 2.2.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் கணக்கு விடயங்களுக்கு எதிரே காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்கு விடயம் | | பெறுமதி | சமர்ப்பிக்கப்பட்டிருக்காத சான்றுகள் |
|---|---|---|---|
| | | ரூபா. | |
| (அ) | கொடுப்பனவுகள் | 652,070 | 03 கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் மற்றும் அதனோடு தொடர்புடைய ஏனைய ஆவணச் சான்றுகள் |
| (ஆ) | எரிபொருள் செலவு | 861,068 | ஓட்ட அட்டவணைகள் |
| (இ) | கடன்பட்டோர் மீதிகள் (2006 ஆண்டிற்கு முன்னர் இருந்து இனங்காணப்படாதவை) | 6,611,743 | ஆரம்ப பேரேட்டு கணக்குகள், பட்டோலைகள், காலப்பகுப்பாய்வு, மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதங்கள் |
| (ஈ) | பணிப்பாளர் (சந்தைப்படுத்தல் மற்றும் விளம்பரப்படுத்தல்) பதவிக்காக கொடுப்பனவு | 500,000 | நியமனக் கடிதம், தனிப்பட்ட கோவை, பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் |
| (உ) | சட்ட விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த கிரயம் | 351,375 | கோவைகள் மற்றும் கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் |

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | |
| (i) நிதிப் பிரமாணம் 137 | 17 சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 4,158,090 தொகையான கொடுப்பனவுகள் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| | (ii) நிதிப் பிரமாணம் 245(1) | சான்றுபடுத்தும் உத்தியோகத்தரினால் அனைத்து கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களும் சான்றுபடுத்தப்பட வேண்டும். எனினும் மொத்தப் பெறுமதி ரூபா 7,275,457 தொகைக்கான 22 கொடுப்பனவுகள் சான்றுபடுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2000 ஜுன் 27 ஆந் திகதிய பீஎப்/பீஈ/09 ஆம் இலக்க அரச கணக்கு சுற்றறிக்கை | மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 500,000 தொகையான நிலையான வைப்புக்களின் முதலீட்டிற்காக திறைசேரியின் அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை. |
| (இ) | 2003 மார்ச் 28 ஆந் திகதிய எம்எப்/ரீ/ஆர்/01/2003 ஆம் இலக்க நிதி, திட்டமிடல் அமைச்சுச் செயலாளரின் சுற்றறிக்கை | வாகனங்கள் வாடகைக்கு பெற்றுக்கொள்ளக் கூடிய உச்சமட்ட மாதாந்த வாடகை ரூபா 40,000 ஆக இருந்த போதிலும் அதற்கு முரணாக மாதாந்த வாடகை ரூபா 65,000 இற்காக வாகனம் ஒன்றிற்குச் செலுத்தும் அடிப்படையில் பெற்றிருந்ததுடன் அவ்வாகனத்திற்காக மீளாய்வாண்டின் போது மேலதிகமாக செலுத்தியிருந்த ரூபா 300,000 தொகை ஆகும். |
| (ஈ) | 2011 பெப்ரவரி 09 ஆந் திகதிய 13/2008(IV) ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி மற்றும் 2015 மே 25 ஆந் திகதிய பீஈடீ/1/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 3.2 ஆம் பிரிவு | மீளாய்வாண்டின் போது நிறுவனத்தின் தலைவரினால் முறையான அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளாமல் ரூபா 167,696 கிரயமான எரிபொருள் 1554 லீட்டர்களுக்காக பணம் செலவிடப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (உ) | அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 5.4.12 ஆம் பந்தி | பெறுமதிசேர் வரியை மேவுகை செய்வதற்காக பணக்கொடுப்பனவின் பின்னர் தொடர்ந்து வரும் மாதத்தில் 15 ஆம் திகதி அல்லது அதற்கு முன் அக்கொடுப்பனவுகள் தொடர்பாக விபரங்கள், கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதி ஒன்றுடன் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட வேண்டும். எனினும் மீளாய்வாண்டு மற்றும் கடந்த ஆண்டுகளின் போது அக்கொடுப்பனவுகள் தொடர்பான அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்க வில்லை. |

**2.4 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

மீளாய்வாண்டின்போது கூட்டுத்தொகை ரூபா 4,719,806 தொகைக்கு 19 கடன்பட்டோர் மீதிகள் மற்றும் கூட்டுத்தொகை ரூபா 50,073,707 ஆன 17 கடன்கொடுத்தோர் மீதிகள் முறையான பரிசோதனை மேற்கொள்ளப்படாமல் முன்னைய ஆண்டிற்கான இலாபத்திற்கு சீராக்கல் செய்யப்பட்டிருந்தது.

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவனத்தின் நிதி விளைவுகள் ரூபா 28,537,464 ஆன பற்றாக்குறையொன்று காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 686,947 ஆகக் காணப்பட்டமையால் முன்னைய ஆண்டுடன் தொடர்புடைய மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 27,850,517 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. நேர்செலவுகள் ரூபா 173,792,564 இனால் குறைவடைந்திருந்த போதிலும் வருமானம் ரூபா 182,451,420 இனால் குறைவடைந்திருத்தல் மற்றும் விற்பனை விநியோகச் செலவுகள் ரூபா 12,061,372 இனால் அதிகரித்தல் மேற்படி வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் கடந்த 04 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்யும் போது 2011 ஆண்டு முதல் 2013 ஆண்டு வரை நிதி மிகையொன்று ஏற்பட்டிருந்த போதிலும் 2014 மற்றும் 2015 ஆண்டுகளின் போது நிதிப் பாற்றாக்குறையொன்று ஏற்பட்டிருந்தது. ஊழியர் வேதனம் அரசுக்கு செலுத்திய வரி மற்றும் பெறுமானத்தேய்வு என்பவற்றை கவனத்தில் எடுத்தபோது 2011 ஆண்டின்

போது ரூபா 69,406,706 ஆகக் காணப்பட்ட பங்களிப்புத் தொகை 2013 ஆண்டின் போது ரூபா 148,832,121 தொகை வரை தொடர்ச்சியான முன்னேற்றமொன்று ஏற்பட்டிருந்த போதிலும் 2014 மற்றும் 2015 ஆண்டுகளின் போது பங்களிப்புத் தொகை முறையே ரூபா 122,176,359 தொகை மற்றும் ரூபா 42,223,469 ஆக இருந்தது.

**3.2 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்**

முக்கியமான கணக்கீட்டு விகிதாரசாரங்களின் பகுப்பாய்வொன்று கீழே தரப்பட்டுள்ளது.

| **விகிதம்** | **2015** | **2014** |
|---|---|---|
| திரவத்தன்மை விகிதாசாரம் | | |
| (i) நடைமுறை விகிதம் | 1.5:1 | 1.25:1 |
| (ii) விரைவு விகிதம் | 1.5:1 | 1.25:1 |

முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது மீளாய்வாண்டிற்கான கணக்குகளில் காட்டப்பட்டுள்ள புள்ளிவிவர பெறுமதிகளின் படி நடைமுறை விகிதம் மற்றும் விரைவு விகிதத்தில் முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டிருந்த போதிலும் நடைமுறை சொத்துக்களில் அடங்கியுள்ள நானாவித கடன்பட்டோரில் 09 வருடங்களை விட மிகையான காலம் முதல் காணப்படும் இனங்காணப்படாத கடன்பட்டோர் மீதி ரூபா 6,611,743 தொகை மற்றும் நிறுத்தி வைத்தல் வரி ரூபா 5,917,583 தொகை அடங்கியிருந்த காரணத்தினால் உண்மையான திரவத்தன்மை இதனை விட குறைவடைய முடியும்.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றுகை**

நிறுவனத்திற்காக சட்டமொன்றின் மூலம் அல்லது சட்டரீதியான ஆவணம் ஒன்றின் மூலம் அல்லது அறுதியாக இனங்காணப்பட்ட குறிக்கோள்கள் காணப்படவில்லை. அத்துடன் கூட்டிணைந்த திட்டத்தில் மனித வள அபிவிருத்தி, வளப்பயன்பாடு, சேவை பெறுவோர் மீது கவனம் செலுத்தப்படல் மற்றும் இலாப எதிர்பார்ப்பு ஆகிய குறிக்கோள்கள் குறிப்பிடப்பட்டிருந்தன. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 ஜுன் 02 திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க நல்லாளுகை பற்றிய பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 4.2.2 இன் படி பணிப்பாளர் சபையினால் கூட்டிணைந்த திட்டம், பாதீடு மற்றும் செயலாற்றுகை அவ்வப்போது புலனாய்வு மேற்கொண்டு உண்மையான செயலாற்றுகை, திட்டமிட்ட செயலாற்றுகையுடன் வேறுபடுகின்றனவா என பரிசோதனை மேற்கொண்டு அதன்படி கூட்டிணைந்த திட்டம் மற்றும் பாதீடு மாற்றியமைக்க வேண்டும். எனினும் அதன்படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் குறிக்கோள்களை எய்துவதற்காக 14 நிகழ்ச்சித் திட்டங்கள் இனங்காணப்பட்டிருந்ததுடன் அவற்றில் 2 பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. 7 நிகழ்ச்சித் திட்டங்கள் போதியளவில் செயற்பட்டிருக்கவில்லை. அத்துடன் 5 நிகழ்ச்சித்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதே போல் குறிப்பிட்ட செயலாற்றுகை காலாண்டு அடிப்படையில் மதிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.2 வெளிப்படையான மோசடிகள்

2014 ஆண்டின் போது, பலவீனமான நிதி முகாமை, அகக் கட்டுப்பாட்டின் பலவீனங்கள் மற்றும் உள்ளகக் கணக்காய்வு முறைப்படி செயற்படாமையின் காரணமாக நிறுவனத்தின் உத்தியோகத்தர்களினால் ரூபா 11,988,000 தொகையான நிதி மோசடி ஒன்றினை செய்திருந்தனர். நிறுவனத்தினால் நிதிப்பிரமாணங்கள் 103 மற்றும் 104 இன் பிரகாரம் இது தொடர்பாக முறையான விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டு அவற்றிற்கு பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனினும் அவ்வாறு செய்திருக்கவில்லை.

### 4.3 பதவியணியினர் நிருவாகம்

2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மூன்றாம் நிலை மற்றும் ஆரம்ப நிலைகளில் மிகையான பதவியணியினர் 16 ஆக காணப்பட்டதுடன் அதற்காக முறையான அங்கீகாரம் ஒன்றினை பெறுவதற்கான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. மேலும் சிரேஷ்ட நிலை மற்றும் இரண்டாம் நிலைகளில் காணப்பட்ட 15 வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

---

**5.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்**

---

2003 ஜுன் 02 திகதிய பீஈடீ/12 இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 பிரிவின் பிரகாரம், கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும் 135 நாட்கள் கால தாமதத்தின் பின்னர் நிதிக்கூற்றுக்கள் 2016 ஜுலை 13 திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**5.2 கூட்டிணைந்த திட்டம்**

---

2003 ஜுன் 02 திகதிய பீஈடீ/12 இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 ஆம் பிரிவின் பிரகாரம் 2014 முதல் 2016 ஆண்டு வரையான காலப்பகுதி தொடர்பாக கூட்டிணைந்த திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அதில் அடங்க வேண்டிய நிறுவனம் கொண்டிருக்கும் மூலவளங்கள், நிறுவனத்தின் கட்டமைப்பு வரைபடம், கடந்த மூன்று வருடங்களின் செயற்பாட்டு விளைவுகள் பற்றிய மீளாய்வு ஆகிய தகவல்கள் உட்படுத்தப்பட்டிருக்காததுடன் 2015 ஆண்டிற்காக அதனை மீளாய்வு செய்து நாளதுவரையாகத் தயாரித்திருக்கவில்லை.

**5.3 செயல்நடவடிக்கைத் திட்டம்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் கூட்டிணைப்புத் திட்டத்தினை தயாரிக்கும் போது மீளாய்வாண்டின் போது செயற்படுத்துவதற்காக இனங்கண்டிருந்த செயற்பாடுகள் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் அடங்கியிருக்கவில்லை.

(ஆ) 2014 பெப்ரவரி 17 திகதிய 01/2014 இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் படி செயல்நடவடிக்கைத் திட்டத்தில் நிறுவனத்தின் வருடாந்தப் பாதீடு, உத்தேசித்த முக்கிய முதலீடுகள், இயலளவினை விரிவடையச் செய்தல், முக்கிய பெறுகைகள் அடங்கிய வருடாந்த கொள்வனவுத் திட்டம், மனித வள அபிவிருத்தித் திட்டம், கடன்களைத் திருப்பிச் செலுத்தும் முறை மற்றும் உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் என்பன அடங்கியிருக்கவில்லை.

**5.4 உள்ளகக் கணக்காய்வு**

நிறுவனத்தில் உள்ளகக் கணக்காய்வுத் திட்டம், கணக்காய்வு ஐய வினாப் பதிவேடு மற்றும் உள்ளகக் கணக்காய்வு ஐய வினாக்களின் பிரதிகள் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை.

**5.5 கணக்காய்வுக் குழுக்கள்**

2003 ஜுன் 02 திகதிய பீஈடீ/12 இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பிரிவின் படி குறைந்த அளவு மூன்று மாதங்களுக்கு ஒரு முறையேனும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட வேண்டுமெனினும், மீளாய்வாண்டின் போது ஒரு கூட்டம் மாத்திரமே நடத்தப்பட்டிருந்தது.

**5.6 பெறுகைகள் திட்டம்**

நிறுவனத்தினால் மீளாய்வாண்டிற்காக பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.7 ஆண்டறிக்கைகளை சபைக்குச் சமர்ப்பித்தல்**

2003 ஜுன் 02 திகதிய பீஈடீ/12 இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பந்தியின் பிரகாரம் ஆண்டறிக்கைகள் கணக்காண்டு முடிவடைந்து 150 தினங்களுக்குள் பாராளுமன்ற அவைக்கு சமர்ப்பிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனினும் 2012 ஆண்டு முதல் 2014 ஆண்டு வரையான ஆண்டறிக்கைகளை பாராளுமன்ற அவைக்கு சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

**6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவ்வப்போது நிறுவனத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டு பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

13

ஸ்ரீலங்கா கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்பு | | அவதானிக்கப்பட்ட விடயங்கள் |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | கொடுக்கல் வாங்கல்களின் விபரங்களை பெற்றுக்கொள்ளக் கூடிய விதமாக பேரேட்டு கணக்குகள் மற்றும் அதனோடு தொடர்புடைய தகவல்களை சமர்ப்பிக்கப்படாமை. |
| (ஆ) | திட்டமிடல் | உள்ளபடியான நிலைமை மற்றும் திட்டமிடல் நிலைமை இடையே முரண்களை இனங்காணக் கூடிய விதமாக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் பெறுகைகள் திட்டம் தயாரித்திருக்கவில்லை. |
| (இ) | உள்ளகக் கணக்காய்வு | தகைமையுடைய பதவியணியினரை இணைத்து உள்ளகக் கட்டுப்பாட்டின் பலவீனங்கள் மற்றும் ஏற்படுத்தப்பட வேண்டிய வித்தியாசங்களை இனங்காணக் கூடிய விதமாக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினைளு வலுப்படுத்துதல் |
| (ஈ) | கடன்பட்டோர் கட்டுப்பாடு | சரியான தகவல்களை உரிய தினத்தில் தேவையான விதமாக பெற்றுக்கொள்ளக் கூடிய விதமாக பதிவுகள் வைத்திருக்காமை |

ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

ஒப்பம் : எச்.எம். காமினி விஜேசிங்க
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

## செலசினே தொலைக்காட்சி நிறுவனத்தின் 2015 டிசம்பர் 31 ஆம் திகதி அறிக்கைக்கான தெளிவுபடுத்தல்

### 2.2) நிதி அறிக்கை குறித்து கருத்து தெரிவித்தல்

#### 2.2.1) இலங்கை அரச பிரிவுகள் கணக்கியல் தரநிலைகள்

அ) இலங்கை அரச பிரிவுகள் கணக்கியல் தரநிலை 01ன் படி காண்பிக்கப்படும் ரூபா. 4,511,109 தொட்டுணர முடியாத நிகர சொத்துக்கள் **(Intangibale Assets)** ஆக ஒப்பிட்டு சரிசெய்யப்பட்டுள்ளது.

ஆ) இலங்கை அரச பிரிவுகள் கணக்கியல் தரநிலை 02

(1) வரிக்கு உரிய ரூபா. 504,315 பணப்புலக்கம் காசுப்பாய்ச்சல் அறிக்கைளில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்தக்கணக்கு 2014 ஆம் ஆண்டு செய்யப்பட்ட மாற்றங்கள் தவறு என்பதால், அந்தத் தசறை சரி செய்ய வரும் வருடங்களில் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

11) கட்டிடங்களின் புதுப்பித்தல் செலவு ரூபா. 1,842,062 மதிப்பீட்டில் ஆண்டு நிதி இல்லாததததால் காசுப்பாய்ச்சல் அறிக்கையில் இருந்து நீக்கி வரும் வருடங்களில் சரி செய்ய்ப்படும்

111) 2014 ஆம் ஆண்டு ரூபா. 3,890,834 பணமாக காசுப்பாய்ச்சலில் முதலீட்டு வட்டியாக பதியப்பட்டுள்ளதுடன், 2015 ஆம் ஆண்டு முதலீட்டு வட்டி ரூபா. 7,195,402 ஆனதுடன், மிகுதித்தொகையான ரூபா.3,304,568 ஆனது 2015 ஆம் ஆண்டிற்காக மதிப்பிடப்பட்டுள்ளது.

ஆ) தற்போது முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டது, ஆனால் இன்னும் ரூ. 7,782,363 சொத்துக்கள் மற்றும் உபகரணங்கள் மறு மதிப்பீடு செய்ய எதிர்காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

#### 2.2.3) கணக்கியல் குறையாடுகள்

அ) வட்டியை மதிப்பிடும் போது ஏற்பட்ட தவறினால் 2014 ஆம் ஆண்டுக்கான வருமானம் இந்த ஆண்டின் இலாபத்திற்கு சேர்க்கப்பட்டுள்ளது. இது முந்தைய ஆண்டில் இலாபத்துடன் ஒப்பிட்டு சரிசெய்யப்படும்.

ஆ) மேலே அ. இல் காட்டப்பட்ட தவறினால் அது முன்னைய ஆண்டு இலாபத்திற்கு ஒப்பிட்டு சரிசெய்யப்பட்டுள்ளது.

இ) 1) கடந்த ஆண்டின் இலாபத்திற்கு ஒப்பிட்டு இந்த தவறு அடுத்த வருடம் திறுத்தி அமைக்க ஒழுங்கள் மேற்கொள்ளப்பட்டள்ளது.

11) அடுத்த வருடம் அதை வெட்டி அகற்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இருப்பினும், எமது நிறுவனத்தின் வருமான வரி செலுத்தும் சந்தர்ப்பத்தில் அந்த வருமான வரியில் ஒரு சதவீதத்தை குறைக்க முதலில் தீர்மானிக்கப்பட்டது. அது தொடர்பில் உள்நாட்டு வருவாய் திணைக்களத்திடம் கோரி அதை அகற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஈ) இணங்காணப்பட்ட ஆனால் பெற்றுக்கொள்ளப்படாத கடன்பெற்றோர் ரூபா. 6.6 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மற்றைய 90 நாட்கள் கடந்த கடனாளிகளுக்காக 2.5% ஒதுக்கப்பட்டுள்ளது. முழு கடன் தொகை ரூபா 9.9 மில்லியன் ஆகும். இந்த கணக்குக்கொள்கை உங்களுக்கு சுட்டிக்காட்டப்பட்ட பின் வரம் வருடத்தில் இருந்து மாற்றமடைய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

.

கட்டிடங்களை புதுப்பிப்பதற்காக செலவழிக்கப்பட்ட பணம் ரூபா. 9,210.310 ஆவதுடன், அவ் ஆண்டின் இலாபத்தில் கழிக்கப்பட்டிருப்பது தவறாக இடம்பெற்றுள்ளதுடன் அது மீண்டும் இலாபத்திற்கு ஒப்பிட்டு சரிசெய்யப்பட்டுள்ளது. அந்த செலவினால் அரச திரைப்பட கூட்டுத்தாபன கட்டிடத்தின் மதிப்பு அதிகரிக்க கூடுமோ என கருத்திற்கொண்டு கணக்கில் இடப்படும்.

### 2.2.4) தெளிவுபடுத்தப்படாத வேறுபாடுகள்

அவ்வாறு இடம் பெற்றுள்ளது எல்லா நிறுவனத்திலும் டிசம்பர் 31 கடன் தீர்வுகள் வழங்கப்படுவதுடன் அந்த காசோலைகள் எமது நிறுவனத்திற்கு கிடைத்தது கணக்காண்டிற்கு பின்பேயாகும். எனவே, கடனளிப்புச் சமநிலையில் ஒரு மாற்றம் ஏற்பட்டுவதற்கு காரணமாக உள்ளது. அது தொடர்பில் மேலும் அதுபற்றி ஆராய்ந்து திருத்துவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

### 2.2.5) தணிக்கைகளுக்கு எந்த சாட்சியும் இல்லாமை

அ) வழங்கள் ரூபா. 652,070 வழங்களுக்கான வவுச்சர்கள் மற்றும் அதற்கான ஆவணங்கள் உங்களிடம் வழங்கப்பட்டுள்ளது.

ஆ) எரிபொருள் செலவுகள் 861,068 அது தொடர்பில் கோரப்பட்ட தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது.

இ) இந்த கடனளிப்பு சமநிலை பழையது என்பதனால், கணக்கிலிருந்து நீக்குவதற்கு ஆணையை பெற்றுக்கொள்வதற்கு அமைச்சுக்கு வழங்கி, அமைச்சரவையின் ஆணையின் படி திறைசேறிக்கு வழங்கப்பட்டுள்ளது.இது தொடர்பாக எந்த ஒரு பதிலும் கிடைக்கவில்லை.

ஈ) பணிப்பாளர்(விற்பனை மற்றும் விளம்பர) வெற்றிடத்திற்கு 500,000 சம்பளத்திற்காக செலவிடப்படுகின்றது. இந்த வெற்றிடம் ஒப்பந்த அடிப்படையில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளதுடன், அவர் தனியார் துறையில் செயலாற்றி அருக்க வேண்டியதுடன், அவ்வாறு சேர்த்துக்கொள்ளப்படும் உருவருக்கு 100,000 வரை பெற்றுக்கொள்ள சேர்த்துக்கொள்ளப்படுகின்றது. இதன் போது அவரின் திறமைகள் கவனத்தில் கொள்ளப்படும். இது தொடர்பில் அனுமதியை பெற்றுக்கொள்ள பணிப்பாளர் சபை இல்லாதபோதிலும், தலைவரினால் பதவிக்கான கடிதம் வழங்கப்படும்.

உ) நிறுவனத்தின் 04 ஊழியர்கள் 2007 ஆம் ஆண்டிலிருந்து வேலைநிருத்தம் செய்யப்பட்டதுடன், அவர்கள் நிறுவனத்திற்கு எதிராகவழக்கு தொடர்ந்து இருந்தனர். அதற்கும் மேலாக நிறுவனத்தில் ஏற்பட்ட நிதி தொடர்பான தவறுகளுக்கு விசாரணைகள் இடம் பெறுவதுடன் அது தொடர்பான அனைத்து தகவல்களும் வழங்கப்பட்டுள்ளது. அதற்காக ஆலோசனைக்காக பணம் செலுத்தப்பட்டது. ஆத்துடன் நிறுவனத்தின் ஊழியர் ஒருவருக்கு கொடுப்பனவு வழங்கப்படாமைக்கு கொழும்பு வணிக நீதிமன்றத்தில் வழக்கு பதியப்பட்டுள்ளது. இது இன்னும் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றது. இந்த வழக்கிற்கு உங்களால் காட்டப்பட்டுள்ள ரூபா 351,3745 தொகை செலவிடப்பட்டுள்ளது குறிப்பிடப்பட்டுள்ளது.

### 2.3) விதிகள், ஒழுங்குமுறைகள் மற்றும் முகாமைத்துவத்திற்கு இணங்காமை

அ) 1) உங்களால் முன்வைக்கப்பட்டுள்ள படி ரூபா. 4,158,090 பெறுமதிக்கு 17 வவுச்சர்களின் அனுமதி அளிக்கப்பட வேண்டிய கைகொப்பம் இல்லாததால் அது குற்றம் அல்லது தவறு இல்லை எனவும். அது அதிக வவுச்சர்களை ஒரே தடவையில் கையொப்பம் இடும் போது ஏற்பட்டுள்ள ஒரு தவறு, எதிர்காலத்தில் இது போன்ற தவறுகள் ஏற்படாத வண்ணம் ஊழியர்களை தெளிவூட்டப்பட்டுள்ளது.

11) ஒப்புதல் அளிக்கும் அதிகாரியால் அனைத்து வவுச்சர்களும் கையொப்பம் இடப்பட வேண்டும் என்பதுடன், ரூபா. 7,275,457 பெறுமதிக்கு 22 வவுச்சர்களின் அனுமதி அளிக்கப்பட வேண்டிய கைகொப்பம் அது அதிக வவுச்சர்களை ஒரே தடவையில் கையொப்பம் இடும் போது ஏற்பட்டுள்ள ஒரு தவறு, எதிர்காலத்தில் இது போன்ற தவறுகள் ஏற்படாத வண்ணம் ஊழியர்களை தெளிவூட்டப்பட்டுள்ளது.

ஆ) இது முன் நிருவாக அதிகாரிகளினால் சேர்க்கப்பட்ட மதிப்பினால் செலுத்தவேண்டிய வரி அதற்கான இலக்கம் கிடைக்காததால் இத்தொகை நிலையான வைப்பிள் இடப்பட்டுள்ளது, அந்த ரூபா. 500,000 ற்காக அரச நிதி சுற்றின் அனுமதியை பெற்றுக்கொள்வதற்காக நிதி அமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ளது.

இ) தலைவருக்காக ஒரு வாகனத்தை ரூபா. 65,000 பெறுமதிக்கு வாடகைக்கு பெற்றுக்கொள்வதில் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் செயலாளரின் **MF/TR/01/2003** மற்றும் 2003.03.28 ஆம் திகதி சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த தொகை ரூபா. 40,000 ஐ கடந்து சென்றுள்ளது. அந்த சுற்றறிக்கை வெளியிடப்பட்ட 2003 ஆம் ஆண்டு வலைவாசிகளை விட தற்போது விலை உயர்ந்ததே அதற்கு காரணமாகும். குறித்த சுற்றறிக்கையின் படி இவ்வாறான சந்தர்ப்பங்களில் அனுமதிக்கப்பட்ட எல்லையை மீறி போகுமாயின் நிதி அமைச்சின் அனுமதியை பெற்றுக்கொள்ளுதல் அவசியமாகும். அது தொடர்பான வேண்டுகோள்கள் நிதி அமைச்சிக்கு அனுப்ப அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஈ) ஆதிகாரி ஒருவர் தமது கடமையின் போது வழங்கப்பட்ட எரிபொருள் கொடுப்பனவிலும் அதிகமாக போகும் போது **PFD 01/2015** மற்றும் **2015/5/15** தின சுற்றறிக்கைகளின் படி தலைவரினால் மேலதிக சேவைக்கான செலவுகள் பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் பிரதான கணக்காருடன் அமைச்சரவையின் செயலாளர் அனுமதிக்கு வழங்கப்பட வேண்டும். இருப்பினும் அமைச்சரவையில் இப்போதைக்கு பணிப்பாளர் சபை நியமிக்கப்பட்டு இல்லாமையால், சிறிது காலம் காத்திருக்க வேண்டியதுடன் அது முழுமைப்படுத்தப்படாததால் எல்லா அதிகமான எரிபொருள் வேண்டுகோள்களும் அமைச்சரவையின் செயலாளர் அனுமதிக்காக வழங்கப்பட்டுள்ளது. இந்த சுற்றறிக்கையின் படி ஒவ்வொரு மாதமும் அதிகமாக போகும் எரிபொருளுக்கான அனுமதியை அமைச்சரவையின் செயலாளரிடமே பெற்றுக்கொள்ள வேண்டும். இந்த மேலதிக எரிபொருள் பாவனைக்கான அனுமதியை பெற்றுக்கொள்வதற்கான தேவையான நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உ) அரசு கொள்முதல் வழிகாட்டுதலின் பிரிவு 5.4.12 இன் படி ஊழியர் குழாம் தெளிவுட்டப்பட்டதுடன், மேலும் ஒவ்வொரு மாதத்தின் 15 வது தினத்திற்கு முன்பாக சேர்க்கப்பட்ட அளவுகளின் படி வரி செலுத்துகை தொடர்பான அனைத்து விடயங்களும் கணக்காய்வாளருக்கு மற்றும் உள்நாட்டு வருவாய் ஆணையாளர் நாயகத்திற்கு தெரியப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.

### 2.4) போதுமான பரிவர்த்தனைகளுடன் பாதுகாப்பற்ற பரிவர்த்தனைகள்

அ) உங்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள கடனளிப்பு சமனிலைகள் 19ற்கு உரிய கடனளிப்பு சமனிலைகளை நீக்கி கடந்த ஆண்டின் இலாபத்திற்கு ரூபா. 4,719,806 பெறுமதியான கடன்பட்டோருக்கு உரிய செயன்முறையை பின்பற்றி அதை சார்ந்த தகவல்களை தேடி கணக்குகளை ஆரம்பிக்கும் போது ஏற்பட்ட தவறுகளை திருத்த தேவையான ஜெர்னல் அட்டவணையை அமைத்தல். இது கடன்பட்டோரை அகற்றி விடாமல் நேர்ந்த தவறை சரிசெய்தலே ஆகும். தற்போது நிறுவனத்தில் பணிப்பாளர் சபை ஒன்று இல்லாததால், தலைவரிடம் அனுமதி பெற்று இந்த பொருந்துதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

முதிப்பாய்வு ஆண்டில் கடன்பட்ஆடாரின் பெறுமதி கடந்த ஆண்டு தயாரிக்கப்பட்ட தணிக்கையில் சரிஉகு குறிப்பிடப்படவில்லை. ஆந்த பிழையான பதிவுகளை சரிசெய்ய கடந்த ஆண்டு இலாபத்திற்கு ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக குறித்த ஜெர்னல் அட்டவணைகள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் பணிப்பாளர் சபை ஒன்று இல்லாததால், தலைவரிடம் அனுமதி பெற்று இந்த பொருந்துதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 3) நிதி ஆய்வுகள்

### 3.1) நிதி முடிவுகள

உங்களினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதன் படி 2014ஆம் ஆண்டைப்போலவே 2015 ஆம் ஆண்டும் 40.54% நிதிச்சரிவு பதிவாகியுள்ளதுடன், மதிப்பாய்வு ஆண்டில் 41% வீழ்ச்சியும் ஏற்பட்டுள்ளது . நிறுவன மற்றும் நிர்வாக செலவுகள் 26% இன்றி 41% உயர்வு கண்டுள்ளது. விற்பனை மற்றும் விநியோக செலவு 27.8% உயர்ந்துள்ளது. இந்நிலைக்கான காரணம் மதிப்பாய்வு ஆண்டின் வருமானம் கடந்த ஆண்டிலும் பார்க்க 183 மில்லியன் குறைவடைந்து உள்ளமையே ஆகும். விற்பனை பிரிவின் அதிகாரிகளும் தமது இலக்குகளை அடைய தவறியதுடன், அதன் விளைவாக மற்றைய பிரிவுகளிலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. பல நேரங்களில் எங்களால் வழங்கப்படும் வேலைக்கான வசதிகள் இங்கு இல்லாத போது அதை பெற்றுக்கொள்வதற்கு தேவையான ஒரு விலையை வழங்க வேண்டியுள்ளது. அவ்வாறு

இல்லாவிடின் போட்டித்தன்மை மிக்க இந்த சந்தையில் நிலைத்திருப்பது கடினமாகும். இருப்பினும் அவ்வாறான நிலை ஏற்படாமல் போட்டித்தன்மை மிக்க இந்த சந்தையில் சிறப்பாக செயற்பட்டு வழங்கப்பட்ட இலக்குகளை அடைந்து நிறுவனத்தின் இந்த போக்கிலிருந்து மாற்றம் பெறச்செய்யம் நோக்கில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நீங்கள் சுட்டிக்காட்டியதன் படி கடந்த சில ஆண்டுகளாக நிறுவனத்தின் கணக்குகளை சமர்ப்பிக்கும் போது 2013 ஆம் ஆண்டிற்கு நிகராக 2014 இல் 18% உம் 2014 ற்கு நிகராக 2015 இல் 65% உம் குறைந்துள்ளது.

இந்த நிலைக்கு காரணம் நிறுவனத்தின் பொதுச் செலவுகள் அதிகரித்தமையேயாகும். விற்பனை குறைவடைந்ததுடன் பொதுச் செலவுக்ள அதிகரித்தமையும் இந்நிலைக்கு முக்கிய விடயங்களாக அமைகின்றது. அத்துடன் எமது நிறுவனத்தினால் தயாரிக்கப்படும் தயாரிப்புக்கள் பெரிய இலாபநோக்கமற்று செயற்படுதலும் இந்நிலைக்கான காரணங்களாகும். ஆத்துடன் பிரிவுகளின் அதிகாரிகள் தமது பிரிவுகளுக்கு தேவையான பயிற்சிகளை வழங்கி செயறப்படுத்தவும், தற்போது மேற்கொண்டுவரும் செயற்பாடுகளுக்கு மேலாக அச்சிடல் செயற்பாட்டுக்கான தீர்வுகளையும் வழங்குதல் மூலம் இந்த கடனமாக சூழ்நிலையில் இருந்து நல்ல ஒரு சூழ்நிலைக்கு செல் நடவமக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.

### 3.2) வேலை மூலதன நிர்வாகம்

**கண்டறியப்படாத கடன் தொகை இருப்பு ரூ. 6,611,743 ஆவதுடன், அந்த நிலுவையை அகற்ற அமைச்சின் மூலம் திறைசேறியில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அதனால் பெறுமதி அரச பொது நிதித் துறையில் பெற்றுக்கொண்டு புத்தகங்களில் இருந்து நீக்கப்படவேண்டியுள்ளது. அதுவரை அது அவ்வாறே இருக்கும். வைப்பில் இருக்கும் தொகை எதிர்காலத்தில் வரிசெலுத்தும் போது குறைக்க சொத்துக்கள் பயன்பாட்டை பயன்படுத்த அனுமதியளிக்கப்பட்டுள்ளது.**

## 4) செயற்பாட்டு ஆய்வு

### 4.1) முகாமைத்துவ செயற்திறன்

அ.) சுற்றறிக்கை மூலம் குறிப்பிடப்பட்டுள்ளபடி PFD 12 மற்றும் 02.06.2003 ஆம் ஆண்டின் சுற்றறிக்கை அடிப்படையில் கார்ப்பரேட் திட்டம் வரவு செலவு செய்யப்படுகிறது. நிகழ்த்தப்பட்ட செயல்திறன் அவ்வப்போது மதிப்பாய்வு செய்யப்பட்டு, 2015 ஆம் ஆண்டில் நிறுவலின் செயற்திறனை மேம்படுத்தவும், பாரம்பரியப் பத்திரங்களுக்கு வெளியே பல்வேறு பிரிவுகளில் நுழைய முயற்சி செய்யவும், இதன் விளைவாக நிகழ்ச்சி முகாமைத்துவ பிரிவு, இணைய வடிவமைப்பு பிரிவு போன்றவை மாறுபட்ட செயற்பாடுகளையும் மேற்கொண்டு வருகின்றது. அந்த பகுதிகளில் இருந்து வருமானத்தை பெற சில குறிப்பிட்ட காலவரையறை தேவைப்படுகின்றது.

அவர்களின் முன்னேற்றத்தை வழுவாக்க ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இருப்பினும் இலக்குகளை அடைய பல காரணங்கள் கடினமாக இருந்தது. நிறுவனத்தின் விற்பனை இலக்குகளை அடைவதன மூலம் நிறுவனத்தின் வருவாயையையும் அதிகரித்துக்கொள்ள கூடியதாக உள்ளது ஆனால் அந்த நிலையை அடைய போட்டித்தன்மை மிக்க இந்த சந்தையில் அரச நிதிகள் கிடைக்காத நிறுவனம் என்ற அவற்றை அடைவது பெரும் சவாலாக உள்ளது. இதுவரை பணிப்பாளர் சபை நியமிக்க படாத நிலையில், நிறுவனத்தின் கொடுக்கல் வாங்கல்களில் சரியான ஒரு நிலை தேவையான போதும் அது தொடர்பில் பரிட்சீக்கப்பட்டு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

இ.) நான்கு பிரதான திட்டங்களுடனான செயற்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில் இலக்குகளை அடைய வேண்டுமென்ற நோக்குடன் செயற்படுத்தப்படுகின்றது. இருப்பினும் அவ்வேலைத்திட்டங்களுக்கு தேவையான வசதிகள் இல்லாததால் அவற்றை முழு நேரமும் செயற்படுத்துவது கடினமாக உள்ளது. ஊடக நிறுவனம் ஒன்றை நிறுவ எதிர்ப்பார்த்ததுடன் அதை செயல்படுத்த முடியாமல் போனது . ஒரு அதிவேக அச்சிடும் விநியோக மையத்தை நிறுவுவதற்கு திட்டமிடப்பட்ட போதிலும் நிதி வசதிகள் இல்லாததால் செயல்படுத்த முடியாமல் போனது. இவ்வாறு திட்டமிடப்பட்ட திட்டங்கள் தொடர்பில் ஒவ்வொரு காலாண்டுக்கும் ஒரு முறை ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்படுவதுடன் அதன் படி தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆதன் படி இதன் தகவல்கள் பொது நிறுவனங்கள் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

### 4.2) காட்சி முறைகேடுகள

2014 ஆம் ஆண்டு இடம்பெற்ற முகாமைத்துவ கட்டுப்பாட்ட தவறினால் நிறுவனத்தின் குறைகள் இணங்காணப்பட்டு காலதாமதமின்றிஅ த்தவறுகளை தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நிறுவனத்தில் நடைபெற்ற ரூ. 11,988,000.00 நிதி மோசடி தொடர்பாக ஆரம்ப விசாரணை நடத்தப்படுகின்றது. அமைச்சுக்கள் மட்டத்திலும் விசாரணைகள் நடைபெறுகின்றதுடன், நிதி குற்றவியல் புலனாய்வு பிரிவின் ஆரம்ப விசாரணைகளிலும் ஒரு ஆரம்ப விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 4.3) பணியாளர்கள் நிர்வாகம்

2015.12.31 ஆம் திகதிக்கு வெற்றிடங்கள் 15 மற்றும் அதிகமானது 16 என இணங்காணப்பட்டுள்ளன. இதற்கான காரணமாக அமைவது பல ஆண்டுகளாக பதவி அமர்த்தலின் போது அவர்களால் சரியான சேவை வழங்கப்பட்டுள்ளதுடன் வழங்கப்பட்ட பதவியின் பெயர் மாறுபட்டமையேயாகும். இனிவரும் காலங்களில் வேலைக்கு அமர்த்தும் போதும் , பதவி உயர்வ வழங்கும் போதும் சரியான முறையில் தேவையான அனுமதி முகாமைத்துவ சேவை திணைக்களத்தினால் வழங்க திட்டமிடப்பட்டள்ளது.

## 5) நிதி செயற்பாடுகள் மற்றும் நல்லாட்சி

### 5.1) நிதி அறிக்கைகளை சமர்ப்பித்தல்

நிதி அறிக்கையை முன்வைக்கும் போது பீஈடீ / 12 மற்றும் அரச வியாபார சுற்றறிக்கை 6:5:1 களின் படி கணக்காண்டு முடிவில் 60 நாட்களுக்குள் கணக்காய்வாளருக்கு சமர்ப்பிக்க வேண்டியதுடன் கணக்குகளை குறித்த தினத்தில் கடந்த ஆண்டு வழங்க முடியாமல் போனது தணிக்கை அலுவலகத்தில் வழங்கும் போது ஏற்படும் திருத்தங்களை திருத்துவதற்கு நேரம் எடுப்பதனாலேயே அந்த காலதாமதம் ஏற்படுகின்றது. எவ்வாறாயினும் எதிர்காலத்தில் வெற்றிடங்கள் பூரணப்படுத்தப்பட்டிருப்பதுடன், அறிக்கைகளை நேரத்திற்கு பெற்றுக்கொள்ளும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### 5.2) நிறுவன திட்டம்

அ) நிறுவனத்தினால் 2014 - 2015 வருடங்களுக்காக இணைந்த திட்டங்களாக அரச வியாபார சுற்றறிக்கை PED/12 மற்றும் 2003.06.20 இன் படி ஒழுங்குசெய்யப்பட்டு கையளிக்கப்பட்டது. ஆங்கு குறிப்பிடப்பட்ட இலக்குகள் மற்றும் செயற்பாடுகளை தக்கவைத்துக்கொள்ள ஒவவொரு வருடமும் முயற்சிப்பதுடன், அந்த ஆண்டு அடைந்த இல்கு பற்றி ஆராய்வதுடன், அமைச்சுக்கு அந்த அறிக்கைகளும் அனுப்பப்படும். அது தொடர்பில் எதிர்காலத்தில் செம்மையாக செயற்படவதுடன், அதிகாரிகளுக்கும் ஆலோசனைகள் வழங்கப்படும். உங்களால் காண்பிக்கப்பட்டுள்ள இணைந்த செயற்திட்டங்கள் நிறுவனத்தில் உள்ள சொத்துக்கள், இணைந்த திட்டத்தின் கடந்த மூன்று ஆண்டு கால தகவல்கள் ஆவணத்துடன் இணைக்க செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 5.3) செயல்திட்டம்

அ.) இணைந்த திட்டத்தில் சேர்க்கப்பட்ட சில நடவடிக்கைகள், அதிரடி திட்டத்தில் சேர்க்கப்படவில்லை தேவையான ஒப்புதல் இல்லாமல், விளம்பர மற்றும் உயர் வேக அச்சிடும் சேவை மையம் தொடங்குவதற்கு வசதி இல்லாததால், நிதி பற்றாக்குறை மற்றும் ஒரு அச்சிடும் பள்ளியை திறப்பது தேவையான ஒப்புதல் தாமதமாகியமை.

ஆ) இல் நீங்கள் குறிப்பிட்டுள்ளபடி செற்பாடடில் அரச சுற்றறிக்கை 01/2014 மற்றும் 2014/02/17 இன் படி முன்வைக்க சடைமுறை மேற்கொள்ளப்பட்டுள்ளது. வருடாந்த வரவு செலவு திட்டம், முக்கிய முதலீடுகள்,

திறன் விரிவாக்கம், வருடாந்த கொள்முதல் திட்டங்கள் மனித வள அபிவிருத்தி திட்டம், கடன் திருப்பிச் செலுத்தும் கொள்கை, கொடுப்பனவு திட்டம் மற்றும் உள் தணிக்கை திட்டம் போன்றவற்றிற்கு சடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 5.4) அக தணிக்கை

நிறுவனத்தின் தணிக்கை பிரிவில் அரை ஆண்டுவரை பற்றாக்குறை நிழவியதுடன், அதற்காக 2015 ஆம் ஆண்டு பதிய அதழகாரி ஒருவர் நியமிக்கப்பட்டதுடன், அந்த பதிவ மீண்டும் வெற்றிடமானது. ஆந்த வெறிறிடத்தை நிரப்பும் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. ஆந்த பிரிவினால் நிறுவனத்தின் நிர்வாகம் மற்றும் பரிசீலனைகளும் மேற்கொள்ளப்படுவதுடன் அவற்றை தடுக்கவும், சரியாக பரீட்சிக்கவும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. தேவையான அனைத்து தகவல்களையும் வழங்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 5.5) தணிக்கை குழுக்கள்

நிறுவனத்தின் அக தணிக்கை பதவிகளில் வெற்றிடங்கள் இருந்த போதிலும், நிர்வாக அலுவலரின் வெற்றிடமும் இருந்தது. இந்த காரணங்களால் தணிக்கை மற்றும் முகாமைத்துவ சபை குறித்த நிலையில் செயல்படுத்த முடியாமல் இருந்தது. எதிர்காலத்தில் உரிய சிற்றறிக்கையின் படி முகாமைத்துவ சபையின் கூட்டத்தை நடாத்த செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### 5.6) கொள்முதல் திட்டம்

இந்த நிறுவனத்தின் நிர்வாக பிரிவின் பொறுப்பாளர் ஒருவர் இல்லாதிருந்ததால், இந்த நடவடிக்கைகள் கண்காணிக்கப்பட்டு இந்த திட்டத்தை தயாரிப்பதில் தாமதம் ஏற்பட்டது. எதிர்காலத்தில் கொள்முதல் திட்டம் சரியான நேரத்தில் தயாரிப்பதற்கானநடவடிக்கை எடுக்கப்படும்.

### 5.7) ஆண்டறிக்கையை அட்டவணையிடல்

இல PED/12 மற்றும் 2003.06.02 தினத்தில் அரச வியாபார சுற்றறிக்கையின் படி கணக்கறிக்கையினை வருட முடிவிற்கு 150 நாட்களுக்கு முன் பாராளுமன்றத்தில் கையளிக்க வேண்டும் எனும் பொறுப்பு இருப்பதுடன் அதற்கு பொறுப்பான அதிகாரி இல்லாததால் 2012 மற்றும் 2013 ஆண்டுகளுக்கான அறிக்கைகளை வழங்கடுடியாமல் போனது. துற்போது அந்த அறிக்கைகளை அச்சிட்டு தயார்செய்து பாராளுமன்றத்தில் கையளிப்பதற்கு தேவையான செயற்பாடுகளுக்காக அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் எவ்வித காலதாமதமும் இன்றி பாராளுமன்றத்திற்கு சரியான நேரத்தில் ஒப்படைக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

## 6) கட்டுப்பாட்டு அமைப்புகள்

அ. கணக்கியல்

உங்களினால் காட்டப்பட்டுள்ளவாறு லெட்ஜர் கணக்குகளில் விரிவாக தயார் செய்ய படிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆ). திட்டமிடல்

உண்மை நிலை மற்றும் தற்போதைய நிலை தொடர்பில் அறிந்து கொள்ள வருடாந்த செயற்பாடுகள் மற்றும் கொள்முதல் திட்டமிடலை மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டள்ளது.

இ). அக தணிக்கை

தகுதியான பணிப்பாளர் மத்தியில் அக தணிக்கை பிரிவை சட்டப்பூர்வமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

ஈ) கடன் கட்டுப்பாடு

அனைத்து கடன்பட்டோரின் தகவல்களையும் சரியான முறையில் வைத்துக்கொள்ள நடைமுறைகள் மேற்கொள்ளப்படுகின்றது.

கடன்பட்டோர் நிறுவனங்கள் அதிலும் அதிகமான அரச நிறுவனங்களுடன் இணைந்து கடந்த நிர்வாக அதிகாரசபையினால் செய்யப்பட்ட “தெயட்ட கிருள” கண்காட்சியின் காட்சிகூடங்கள் அமைக்கும் சேவையில் நிறுவனங்கள் திருப்தி நிலை அடையாததால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது. இருப்பினும் எதிர்காலத்தில் இந்த நிலை ஏற்பட காரணமாக இருந்தவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள நிர்வாக அதிகாரசபை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.



**சாந்த பண்டார ஜெயவர்தன**
**தலைவர்**
**செலசினே தொலைக்காட்சி நிறுவனம்**

SELACINE TELEVISION INSTITUTE

SELACINE TELEVISION INSTITUTE
No. 224, Bauddhaloka Mawatha, Colombo 7, Sri Lanka
Tel. : 011 432 0777, 011 205 8227 Fax : 011 205 8229
E mail : info@selacine.lk
www.selacine.lk